STC.No. 16/2025
நாள் 28.01.2026.
P.W.3– ( நாராயணசாமி)

புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

புகார்தாரரின் தகப்பனார் திருப்பதி வாத்தியாரை எனக்கு தெரியும். எதிரி தங்கம் என்பவரை எனக்கு நன்றாக தெரியும் என்றால் ஆம். நான் எதிரி, திருப்பதி வாத்தியார் மற்றும் திருப்பதி வாத்தியாரின் குடும்பத்தாருடன் ரியல் எஸ்டேட் தொழில் செய்துள்ளேன் என்றால் சரி. நான் 15 ஆண்டுகளாக ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். ரியல் எஸ்டேட் வியாபாரத்தில் நிலம் வாங்க விற்க ஒப்பந்தம் செய்வது அவசியம் என்றால் சரி. அவ்வாறு ஒப்பந்தம் ஏற்படுத்தும் போது நான் சாட்சி கையொப்பம் செய்வது வழக்கம் என்றால் நான் அந்த இடத்தில் இருந்தால் சாட்சி கையொப்பம் செய்வேன். எதிரி மற்றும் புகார்தாரரின் குடும்பத்தினரிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் ஆம்.

என்னிடம் காட்டப்படும் 18.06.2021 உறுதி மொழி பத்திரத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது என்றால் நான் சாட்சி கையொப்பம் செய்தது உண்மை. ஆனால் அந்த உறுதி மொழி பத்திரம் நடைமுறைக்கு வரவில்லை.(மேற்படி ஆவணம் எதிரி தரப்பில் குறியீடு செய்ய எதிரி தரப்பு வழக்கறிஞரால் கோறப்பட்டது. மேற்படி ஆவணம் எதிரிக்கு எழுதி கொடுத்ததாக காணப்படுவதால் அதன் அசல் எதிரி வசம் இருக்க வாய்ப்புள்ளது. சாட்சிக்கு அதன் அசல் யாரிடம் உள்ளது என தெரியாது என தெரிவித்ததால் குறுக்கு விசாரணை நிறுத்தப்படுகிறது)

S. Narayanasamy

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அதனால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

28/1/26

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.